aanmeegamalar.com வெளியிடும்

e-magazine
ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

தீபாவளி சிறப்பு மலர் 2



காசி அன்னபூரணி

ஸ்ரீ கோமதி விலாஸ்

சைவ உணவகம்

திருப்பரங்குன்றம்



அன்னம் பாலிக்குந்
தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு
மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு
மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு
மோவிப் பிறவியே.

0452 - 2484995

96296 39640

முருகப்பெருமானின் முதற்படைவீடு திருப்பரங்குன்றம்

வீடுகளில் முதலாவது படை வீடாகத் திகழ்வது திருப்பரங்குன்றம் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில். முருகப்பெருமான் தெய்வயானையை திருமணம் செய்து கொண்ட தலம்.

அறுபடை வீட்டு முருகப் பெருமான் கோயில்களில் இக்கோயில் அளவில் பெரியதாகும். லிங்க வடிவில் இருக்கும் இம்மலையைப் பற்றி சைவ சமயக் குரவர்களில் சுந்தரமூர்த்தி நாயனார், திருஞானசம்பந்தப் பெருமான் ஆகியோர் இவ்வூருக்கு வந்து ஆலய வழிபாடு செய்து பதிகங் கள் பல பாடியுள்ளனர் என்று அறியப் படுகிறது.

சங்ககாலப் புலவரான நக்கீரர் இத் தலத்து முருகப் பெருமானை வழிபட்டு தனது குறை நீக்கிக் கொண்டதிருத் தலம். இத்திருத்தலத்திற்கு இலக் கியங்களில் தண்பரங்குன்று, தென் பரங்குன்று, பரங்குன்று, பரங்கிரி, திருப்பரங்கிரி பரமசினம், சத்தியகிரி, கந்தமாதனம், கந்த மலை எனபல் வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் சிறப்புற்று விளங்கு வது மதுரை மாநகர். இம்மாமதுரை நகரிலிருந்து தென்மேற்கில் தேசிய நெடுஞ்சாலை வழியே 9 கி.மீ. தொலைவில் அமைந்திருப்பது திருப்பரங் குன்றம் என்னும் திவ்வியத்தலமாகும்.

ரயில் வழியாகவும் இவ்வூரை அடையலாம். மதுரையிலிருந்து இத் திருத்தலத்திற்கு ஏராளமான நகரப் பேருந்துகள் செல்கின்றன. பேருந்து நிறுத்தம் கோயிலுக்கு அருகிலேயே உள்ளது.

திருப்பரங்குன்றம்பெயர்க்காரணம்

திரு + பரம் + குன்றம். பரம் என்றால் பரம் பொருளான சிவபெருமான். குன்றம் என்றால் குன்று (மலை). திரு என்பது அதன் சிறப்பை உணர்த்தும் அடைமொழியாகத் திருப்பரங்குன்றம் என ஆயிற்று.

லிங்க வடிவில் மலை:

திருப்பரங்குன்றம் லிங்க வடிவ மாகக் காட்சியளிக்கும் அருட் செறிந்த மலை. இந்தத் திருப் பரங்குன்றத்தில் தங்கி



சிவசக்தியை நோக்கி ஆறுமுகப் பெருமான் தவமிருந்தார்.

இக்குன்றமானது சிவலிங்க வடிவிலேயே காணப்படுவதால் சிவ பெருமானே குன்றின் உருவில்காட்சி யளிப்பதாக எல்லோராலும் வணங்கப் பட்டு வருகிறது. இம்மலையின் உயரம் சுமார் 190 மீட்டராகும். இம்மலையை நித்தம் வலம் வந்து வழிபட்டால் தொழுவாரின் வினைகளெல்லாம் தீர்ந்துவிடும் என்று திருஞானசம்பந் தர் தான் இயற்றிய தேவாரத்தில் பாடி யுள்ளார்.

தவம் செய்த முருகப்பெருமான்:

குரு பக்தியின்றி ஞானம் பெற முடியாது. கயிலாயத்தில் பார்வதி தேவிக்கு, சிவபெருமான் பிரணவ மந்திரத்தின் உட்பொருளைஉபதேசிக் கும்போது, தன் தாயாரின் மடிமீது முருகப்பெருமான் அமர்ந்திருந்தார்.

தாய்க்கு தந்தையார், பிரணவ மந்திர உபதேசம் செய்த போது முருகப்பெருமானும் அவ்வுபதேசத் தைக் கேட்டார்.

புனிதமான மந்திரப் பொருளை குருவின் மூலமாகவேஅறிந்து கொள்ள வேண்டும். மறைமுகமாக அறிந்து கொள்ளுதல் முறை மையாகாது. அது பாவம் என்று சாஸ்திரங் கள் கூறுகின்றன.

எனவே முருகப்பெருமானேபிர ணவ மந்திரத்தினை, அதன்உட்பொரு ளை பிரம்மதேவனுக்குஉபதேசித்த போதிலும், சிவபெருமானும், முருகப் பெருமானும் ஒருவரேயானாலும், உலக நியதிக்கு ஒட்டாத,சாஸ்திரங் கள் ஒப்பாத ஒரு காரியமாக அமைந்து விட்டபடியால், இக்குற்றத்திற்குப் பரிகாரம் தேடி முருகப் பெருமான் திருப்பரங்குன்றத்திற்கு வந்து தவம் செய்தார்.

காட்சி கொடுத்த சிவன் பார்வதி:

கடைசியில், சிவபெருமானும், பார்வதி தேவியாரும் தோன்றி, முரு கப் பெருமானுக்கு அங்குக் காட்சி தந்து அருளினார்கள். அவர்கள் இங்கு பரங்கிநாதர் என்றும், ஆவுடை நாயகி என்றும் பெயர் பெற்றார்கள்.


அவர்களுடைய ஆலயம் இன்றும் திருப்பரங்குன்றத்தில் மீனாட்சி சுந்த ரேஸ்வரர் ஆலயம் என்னும் பெயரில் வழங்கி வருகிறது.

எனவே திருப்பரங்குன்றம் செல் லும் பக்தர்கள் முதலில் சிவன்பார் வதியை தரிசனம் செய்த பிறகே முருகன் ஆலயத்திற்குச் செல்ல வேண்டுமென்பது ஐதீகம்.

அவதரித்ததன் நோக்கம்:


முருகப்பெருமான் அவதாரம்செய்த தன் நோக்கமே சூரபத்மனையும்,அவ னது சேனைகளையும் அழித்துதேவர் களைக் காப்பதேயாகும்.

அவ்வண் ணமே முருகப்பெரு மான் அவதாரம் செய்து, சூரபத் மனை அழித்து, அவனை மயிலும் சேவலுமாக்கி, மயிலை வாகனமாக வும், சேவலை கொடியாகவும் ஏற்றுக் கொண்டருளினார்.



அஷ்ட சாஸ்தா தரிசனம்

சாஸ்தா என்பவர் அறம் காக்கும் தெய்வம். பக்தர்களின் வாழ்க்கையில் பலவித நன்மைகளை அருள 8 வடிவங்களில் அருள்பாலிக்கிறார். இவர்களே அஷ்ட சாஸ்தாக்கள் எனப்படுவர்.



1. வேத சாஸ்தா வேத ஞானம் அருள்பவர்
2. கல்யாண வரத சாஸ்தா திருமணத் தடை நீக்கி நல்வாழ்வு தருபவர்
3. சந்தான பிராப்தி சாஸ்தா குழந்தை பாக்கியம் அருள் பவர்
4. ஞான சாஸ்தா அறிவையும் ஞானத்தையும் தருபவர்
5. ஆதி ஸ்ரீ பூதநாதர் பூத கணங்களுக்கு தலைவன், தீய சக்திகளை விரட்டுபவர்
6. தர்ம சாஸ்தா தர்மத்தை நிலைநாட்டுபவர்
7. மகா சாஸ்தா அனைத்து சக்திகளும் ஒருங்கே அமைந்த மகா வடிவம்
8. சம்மோகன சாஸ்தா மன அமைதியும் கவர்ச்சியும் தருபவர்
9. வீர சாஸ்தா தைரியமும் வெற்றியும் அருளும் வீர வடிவம்

இந்த அஷ்ட சாஸ்தாக்களை வழிபட்டால் குடும்பத்தில் சுபிட்சம், அமைதி, செல்வம் பெருகும் என்பது நம்பிக்கை.

கரு முதல் சதாபிஷேகம் வரை பலன் தரும் கோவில்கள்

கும்பகோணம் திருக்கோயில்களில் "கருமுதல் சதாபிஷேகம்" வரை பலன டைய கீழே குறிப்பிட்டுள்ள கோவில்களை மட்டும் வழிபட்டால் போதும்.

- கரு உருவாக (புத்திரபாக்கியம்) கருவளர்ச்சேரி.
- கரு பாதுகாத்து சுகப்பிரசவம் பெற திருக்கருக்காவூர்.
- நோயற்ற வாழ்வு பெறுவதற்கு வைத்தீஸ்வரன் கோவில்.
- ஞானம் பெற சுவாமிமலை.
- கல்வி மற்றும் கலைகள் வளர்ச்சிக்கு கூத்தனூர்.
- எடுத்த காரியம் வெற்றி மற்றும் மனதைரியம் கிடைக்க பட்டீஸ்வரம்.
- உயர் பதவியை அடைய கும்பகோணம் பிரம்மன் கோயில்.
- செல்வம் பெறுவதற்கு ஒப்பிலியப்பன் கோவில்.
- கடன் நிவர்த்தி பெற திருச்சேறை சரபரமேஸ்வரர்.
- இழந்த செல்வத்தை மீண்டும் பெற திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி.
- பெண்கள் ருது ஆவதற்கும், பிரச்சினைகள் தீர கும்பகோணம் காசி விஸ்வநாதர் (நவ கன்னிகை).
- திருமணத்தடைகள் நீங்க திருமணஞ்சேரி.
- நல்ல கணவனை அடைய கும்பகோணம் ஆதி கும்பேஸ்வரர் மங்க ளாம்பிகை.
- மனைவி, கணவன் ஒற்றுமை பெற திருச்சத்திமுற்றம்
- குழந்தைபாக்கியத்திற்கு.இரட்டை லிங்கேஸ்வரர். சென்னியமங்கலம்.திப்பிராஜபுரம்
- பில்லி சூனியம் செய்வினை நீக்க அய்யாவாடி ஸ்ரீ பிரத்தியங்கிர தேவி.
- கோர்ட்டு வழக்குகளில் நியாயம் வெற்றியடைய திருபுவனம் சரபேஸ்வரர்.
- பாவங்கள் அகல கும்பகோணம் மகாமகத் திருக்குளத்தில் நீராடல்.
- எம பயம் நீங்க ஸ்ரீ வாஞ்சியம்.
- நீண்ட ஆயுள் பெற திருக்கடையூர்.



அன்புகலந்த தீப ஒளித் திருநாளான தீபாவளி நல்வாழ்த்துக்கள்



கோகிலா®
சித்த மருத்துவமனை & ஆராய்ச்சி மையம்
பழமை மாறாத பாரம்பர்யம்
Estd. 1997
டாக்டர் ஜெ.ஜெயவெங்கடேஷ்
BSMS, MD, MPH, PhD
அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர்

சிகிச்சைப் பிரிவுகள்

பொது மருத்துவம் General Medicine	யோக மருத்துவம் Yoga Therapy
தோல் மருத்துவம் Dermatology	மகளிர் மருத்துவம் Gynaecology
அறுவை மருத்துவம் Surgery	குழந்தை மருத்துவம் Pediatrics
புற மருத்துவம் External Therapy	காரநூல் மருத்துவம் Karanool Therapy
வர்ம மருத்துவம் Varmam Therapy	அழகியல் மருத்துவம் Cosmetology
இயன்முறை மருத்துவம் Physiotherapy	முதியோர் மருத்துவம் Geriatrics

தலைமை
27, ஜெய்ஹிந்த்புரம் முதல் தெரு
மதுரை - 625 011
போன் : +91 452 2675674

கிளை
குன்னனம்பட்டி, கரடிக்கல்
திருமங்கலம், மதுரை - 625 706
போன் : +91 4549 299675

34 க்கும் மேற்பட்ட
பொது காப்பீட்டுக் குழுமத்தின்
கட்டணமில்லா சேவை இணைப்பு
பெற்ற முதல் சித்த மருத்துவமனை

98421 67567
www.herbalsiddha.com
jeyavenkateshdrs@gmail.com
jeyavenkateshdr@yahoo.com

aanmeegamalar.com

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

படியுங்கள்...
aanmeegamalar.com
இதுவரை வெளிவந்த
185 e-book
கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

தீபாவளி நாளில் அன்னபூரணியை வணங்கினால் குறைவில்லா செல்வம் பெருகும்

நாம் உண்ணும் உணவுகள் அனைத்தையும் விளைவிப்பதும், அதற்கு ஆதாரமாய் இருப்பதும் அன்னபூரணியே. இந்த அன்னபூரணியை தனத்திரயோதசி தொடங்கி தீபாவளி வரை தொடர்ந்து மூன்று நாட்கள் விரதமிருந்து பூஜை செய்து வணங்கலாம். நம்முடைய வீட்டில் அன்னபூரணி உருவச்சிலை வைத்து பூஜை செய்து வணங்கிட அனைத்து நலன்களையும் வளங்களையும் தருவாள் அன்னபூரணி.

தீபாவளி நாளில் லட்சுமி குபேர பூஜை செய்வது போல நாம் அன்னபூரணியை விரதமிருந்து வணங்க வற்றாத செல்வங்களும், உணவும் கிடைக்கும் என்பது ஐதீகம். காசியில் அன்னபூரணி அள்ள அள்ள குறையாத அட்சயபாத்திரத்தில் பால் அன்னம் தந்து உலக உயிர்களின் அன்னதோஷம் என்னும் வறுமை அண்டாதவாறு அருள்புரிகிறாள்.

தனதிரயோதசி தொடங்கி தீபாவளி, அமாவாசை நாட்களில் காசியில் தங்கமயமாய் காட்சி தரும் அன்னபூரணியை தரிசிக்க வாழ்நாள் முழுவதும் அள்ள அள்ள குறையாத அன்னத்தையும் செல்வத்தை வழங்கிடுவாள் இந்த நாட்களில் தங்க அன்னபூரணியை தரிசிக்கவே பெரும்பாலோனோர் காசி யாத்திரை செல்கின்றனர்.

காசியில் தீபாவளியன்று அன்ன கூடம் என்ற நிகழ்வில் பலவித உணவுகள், பலகாரங்கள் வைத்து பூஜை செய்து அனைவருக்கும் பிரசாதமாக வழங்கப்படும். மறுநாள் லட்டு தேரில் அன்னபூரணி ஊர்வலம் வருவாள். எண்ணற்ற லட்டுகளால் உருவான தேரில் உள்ள லட்டுக்களை பக்தர்களுக்கு பிரசாதமாக கொடுப்பார்கள்.

காசிக்கு வந்த அன்னபூரணி:

அன்னபூரணி அவதாரம் எப்படி நிகழ்ந்தது. அவர் காசிக்கு எப்படி வந்தார் என்பதே ஒரு புராண கதையாக சொல்லப்படுகிறது. நான் முகன் என்று போற்றப்படும் பிரம்மனுக்கு முன்பு ஐந்து தலைகள் இருந்தனவாம். இதனால் கர்வம் அதிகமாக இருந்தது. பார்வதி, பரமசிவன், பிரம்மா ஆகிய மூவருக்கும் இடையேயான சிறு பிரச்சினையில் பிரம்மனின் ஒரு தலையை சிவனார் அறுத்து விட்டார். இதனால் சிவனுக்கு பிரம்மஹத்தி தோஷம் பீடித்தது.



பிச்சாடனார் சிவபெருமான்:

பிரம்மனின் கபாலம் சிவன் கையிலேயே ஒட்டி கொண்டது. இந்த தோஷம் நீங்க பிட்சாடனாராக சிவபெருமான் பல இடங்களில் பிச்சை பெற்றார். ஆயினும் சிவன் கையை விட்டு கபாலம் விழவில்லை. அந்த பாத்திரத்தில் எந்த பொருளும் தங்கவில்லை. அதே நேரம் பிரம்மதேவனை பார்த்து சிவனார் என நினைத்து வணங்கிய பார்வதி, தனக்குத்தானே தண்டனை கொடுத்துக்கொண்டு அன்னபூரணியாக அவதரித்து காசியில் தவம் செய்தாள்.

இந்த சமயத்தில்தான் பிட்சாடனாராக வந்த சிவபெருமான் அன்னபூரணியிடம் பிச்சை பெற்றார்.

அந்த நேரமே பிரம்மனின் கபாலம் சிவபெருமான் கையை விட்டு விலகியது. சிவனின் பசியை தீர்க்க வந்த அன்னபூரணி உலக பசிப்பிணி தீர்க்க காசியிலேயே தங்கி விட்டார் என்கிறது புராண கதை.

அன்னபூரணி வழிபாடு:

காசியில் நவரத்ன சிம்மாசனத்தில் சம் மணமிட்டு அமர்ந்திருக்கும் அன்னையின் ஒரு கரத்தில் அட்சய பாத்திரமும், மறு கரத்தில் தங்க கரண்டியுடன் கூடிய தங்கத்தில் ஜொலிக்கும் அன்னபூரணியை தீபாவளியின்போது மூன்று நாட்களுக்கு மட்டுமே தரிசிக்க முடியும். அன்னையிடம் பிச்சை கேட்கும் பிட்சாடனார் உருவமும் அருகில் ஆரடி உயரத்தில் உள்ளது. இந்த சிலை வெள்ளியால் செய்யப்பட்டது.





தீப ஒளியின் வெளிச்சத்தைப் போல அனைவரின் வாழ்வும் ஒளிரட்டும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்









ஸ்ரீ பேச்சி அம்மன் சேம்பர் பிரிக்ஸ்

டிரேடர்ஸ் & மர ஆலை

மதுரை - ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை
முத்தனேந்தல் அருகில், முனியாண்டிபுரம்



தரமான பொருட்கள் உறுதியான சேவை



குறைந்த விலை உயர் தரம்

எங்களிடம் தரமான செங்கல், வயர்கட் செங்கல், சிமெண்ட், KISCOLL TMT கம்பி, MS பைப், MS ஆங்கில், GI பைப், ASIAN பெயிண்ட், சிமெண்ட் சீட், கூலிங் சீட், எலக்ட்ரிக்கல்ஸ், ஹார்டுவேர்ஸ், பிளம்பிங் மற்றும் மர வகை சாமான்கள் தரமாக மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

வீடு தேடி பொருட்கள் வழங்கப்படும்

தரம் எங்களின் முதல் முன்னுரிமை

நம்பிக்கை எங்களின் வெற்றி

நியாயமான விலை மகிழ்ச்சியான வாடிக்கையாளர்



உரிமையாளர்
எம்.கந்தசாமி
B.Com.,

9342161985, 9042499337, 8825903387, 9363253200

உடனடி தொடர்புக்கு செல் : 9843789337 | 9487059737

கிடாக்குழி (இருப்பு மதுரை)

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் முதலில் அம்மனைத்தான் தரிசிக்கிறோம் ஏன்?

தமிழ்நாட்டில் இருக்கும் பெரும்பாலான சிவன் கோயில்களில் முதலில் சிவபெருமானுக்குத்தான் முக்கியத்துவம் இருக்கும். ஆனால் மதுரையில் மட்டும் அந்த மரபு தலைகீழாக மாறுகிறது. இங்கே மீனாட்சி அம்மன்தான் இந்த நகரத்தின் அரசி. சொக்கநாதர் அரசராக வந்தவர் அல்ல... அரசியின் கணவராக வந்தவர். அதனால்தான் இன்றுவரை கோயில் மரியாதைகளில் மீனாட் சிக்கே முதல் இடம்.

அதனால்தான் இந்த கோயிலை யாரும் "சொக்கநாதர் கோயில்" என்று அழைப்பதில்லை. உலகம் முழுவதும் "மதுரை மீனாட்சி அம்மன் கோயில்" என்றே அறிகிறது. இது வெறும் பெயர் இல்லை... ஒரு அரச மரபு.



இன்னொரு விஷயத்தை கவனி யுங்கள். மீனாட்சி அம்மன் பச்சை நிறத் தில் காட்சியளிக்கிறார். ஆகம மரபில் பச்சை என்பது வளம், செழிப்பு, விளைச்சல், உயிர்ப்பு ஆகியவற்றின் அடையாள மாகக் கருதப்படுகிறது.

ஜோதிடத்தில் பச்சை நிறம் புதன் கிரகத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. அதனால்தான் மிதுனம், கன்னி ராசியில் பிறந்த பலர் மீனாட்சியை வழிபட்டால் கல்வி, வியாபாரம், பேச்சுத்திறன், அறிவு ஆகியவற்றில் முன்னேற்றம் கிடைக்கும் என்று ஜோதிட மரபு கூறுகிறது.

மீனாட்சி கையில் இருக்கும் கிளியும் ஒரு அலங்காரம் மட்டும் அல்ல. பழந்தமிழர் மரபில் கிளி என்பது வாக்கு, ஞாபகம், கலை, தமிழ் ஆகியவற்றின் அடையாளம். அதனால்தான் கலைகளின் தலை நகரமாக வளர்ந்த மதுரையில், தமிழை காத்த தெய்வமாக மீனாட்சி பார்க்கப்படுகிறாள்.

சந்திரன் மொழிக்கு அதிபதி முத்தமிழ் அங்கு வளர்ந்தது. புதன் வியாபார கிரகம் அத னால் மதுரை வியாபார நகரமாக இருக்கு. புதன் நூதனமாக சிந்திப்பது.

புதன் என்றால் நினைவாற்றல்... அதற்கு காரகத்துவம் கிளி. நாம் சொல்வதை உற்று கவனித்து கிரகிக்கும். பச்சை என்றால் வளம்.. மதுரை பணப்புழக்கம் அதிகம்..சந்திரன் உண வுக்கு காரகன் உணவுக்கு பிரபலம் மதுரை..

அதுவும் இட்லி வெள்ளை நிர உனவு... மல்லிகை பூ, தோசை என வெள்ளை நிற பொருட்கள் எல்லாம் மதுரையில் பிரபலம்..

ஒரு கோயில் மட்டும் இதை உருவாக்க வில்லை. அந்தக் கோயி லைச் சுற்றி கவிஞர்கள், இசைக் கலைஞர்கள், நாடகக் கலை ஞர்கள், சிற்பிகள், வணிகர்கள் என ஒரு பெரிய கலாச்சார உல கமே வளர்ந்தது.

ஒரு கோயில் ஒரு நகரத் தின் ஆன்மீக மைய மாக மட்டு மல்ல... அதன் கலை, கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றின் மையமாகவும் மாற முடியும்என்ப தற்கு மதுரை மிகப்பெரிய உதா ரணம்.

மதுரை மீனாட்சி அம்மன் கோ யிலுக்குப் போகும் முன் இதை தெரிந்துகொள்ளுங்கள்...

அங்கே நீங்கள் ஒரு கோயிலை மட்டும் பார்க்க மாட்டீர்கள். தமி ழரின் அரச மரபையும், கலை மரபையும், ஆன்மீக மரபையும் ஒரே இடத்தில் பார்க்கப் போகிறீர்கள்

சனியின் ஆதிக்கம், கர்ம வினை நீக்கும்

கோமாதா வழிபாடு!



'பசு இருக்கும் வீட்டில் பஞ்சம் இருக்காது' என்பார்கள். அந்த அளவிற்கு பசு இருக் கும் இடத்தில் சகல ஐஸ்வர்யங்களும் நிறைந் திருக்கும். பசுவுக்கு 'கோமாதா' என்ற சிறப்பான பெயரும் உண்டு.

'கோ' என்னும் சொல் அரசன் மற்றும் இறைவனைக் குறிக்கப் பயன்படுத்தும் சொல் லாகும். அப்படிக் கடவுளுக்கு நிகரான கோ மாதாவின் சிறப்புகளைப் பற்றி விரிவாகக் காண்போம்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது நந்தா, சுசீலை, பத்திரை, சுரபி, சுமனை என்னும் ஐந்து பசுக்கள் தோன்றின. இவற்றின் சந்ததிகளேஇன்றளவும் கோமாதாவாக நமக்குச் சகல செல்வங் களையும் அளித்து வருகின்றன.

பசுவின் உடலில் மும்மூர்த்திகளும், முப்பத்து முக்கோடித் தேவர்களும், நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிகளும் வீற்றிருக்கிறார்கள்.

மேலும் சகல விதமான தெய்வங்களும், பார் போற்றும் முனிவர்களும், நவகிரகங்களும் இருக்கின்றன. கோமாதாவின் நான்கு கால்கள் நான்கு வேதங்களாகக் கருதப்படுகிறது.

அதனால்தான் கோமாவுக்குப் பூஜை செய் தால், நமக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்கிறது. அனைத்து விதமான தோஷங் களும் நீங்குகிறது.

பசுவை இறைவனின் வடிவமாகக் கருத வேண்டும். கோமாதா பூஜையின் போது, கோமாதாவுக்கு மஞ்சள், குங்குமம் இட்டு, புது வஸ்திரம் சாத்தி, கழுத்தில் மாலை அணிவித்து, தூப தீபங்கள் காட்டி மலர் களால் அர்ச்சனை செய்ய வேண்டும்.

அகத்திக்கீரை, சர்க்கரைப்பொங்கல், மற்றும் பல்வேறு வகையான பழங்களைப் படைக்க வேண்டும். நெய் விளக்கில் ஆரத்தி எடுக்க வேண்டும். எடுத்த பின்னர் காலில் விழுந்து வ ண ங் க வேண்டும்.

பின்புமீண் டும் நெய் தீபத்தால் ஆரத்தி எடுத்து மூன்று முறை கோமாதாவை வலம் வந்து வணங்க வேண்டும். பூஜையின் போது கன்று டன் சேர்த்துதான் பூஜிக்க வேண்டும்.

கோமாதாவைத் தெய்வமாக நினைத்து விரதமிருந்தால், கோலோகத்தை அடையும் பாக்கியம் உண்டாகும்.

பசுவுக்கு உணவளித்தால் நம் கர்ம வினைகள், சாபங்கள் நீங்கும். எந்தக் கிரகத்தால் நமக்குத் தொல்லையோ அந்தக் கிழமையில் பொங்கல் வைத்துப் படைக்க, கிரக பாதிப்புகள் விலகும்.

கோமாதாவுக்கு வாழைப்பழத்துடன் வெல்லம் சேர்த்துப் படைக்க பிதுர் தோஷம் நீங்கி புத்திரப் பாக்கியம் உண்டாகும். பாதி யில் நின்ற கட்டடங்களில் பசுவைச் சுற்றி வரச் செய்தால் தடை விலகி, நின்ற பணிகள் நிறைவுபெறும்.

சனி ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டோர் சனிக்கிழமை பசுவிற்கு அகத்திகீரை கொடுத் துவர, பாதிப்புகள் குறையும். கோபத்தால் விளையும் தீவினைகள் தீரும்.

கோமாதாவின் பிருஷ்டபாகத்தை வழிபட்டால் முன்ஜன்ம பாவங்கள் நீங்கும்.





வாழ்க்கையில் இருக்கும் இருள் மறைந்து பட்டாசு ஒளியைப் போன்று வாழ்க்கை பிரகாசிக்க அனைவருக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்

பாண்டியநாடு அறக்கட்டளை
Govt.Reg.No : 8688 / 22

பாண்டியர்கள் தேடி பயணம்
வரலாற்று ஆய்வுக்குழு

தமிழகத்தின் தொன்மையான பாண்டியர் வரலாற்றை கல்வெட்டு சேகரிப்பு, வாசிப்பு, மொழி பெயர்ப்பு ஆவணப்படுத்துதல் மற்றும் ஆய்வு ஆகிய அறிவியல் முறைகள் மூலம் வரலாற்று உண்மைகளாக வெளிக்கொணரும் ஒரு முழுமையான வரலாற்று ஆய்வு இயக்கம்

- கள ஆய்வுகள்
- கல்வெட்டு கண்டறிதல், வாசிப்பு, விளக்கம்
- கல்வெட்டு தட்டச்சு, மொழி பெயர்ப்பு, ஆவணப்படுத்துதல்
- வரலாற்று ஆவணங்கள், செப்பேடுகள், இலக்கிய ஆதாரங்கள் சேகரிப்பு
- ஆய்வு கருத்தரங்குகள் & விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வரலாற்றில் ஆர்வமுள்ள ஆய்வாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவரும் இணைந்து பயணிக்கலாம். வரலாற்றைத் தேடி - வரலாற்று அடையாளங்களை மீட்கும் பயணம்

தொடர்புக்கு : 90420 09427
Website : www.pandyadynasty.com



பாண்டியநாடு சித்தா & வர்மா மருத்துவமனை

பாண்டியர் கால மருத்துவமரபு முறைப்படி, சித்தர்கள் வழிகாட்டுதல்படியும், ஓலைச்சுவடிகள் மற்றும் கல்வெட்டு ஆதாரங்களில் இருந்து எடுக்கப்பட்ட மருத்துவ முறைகளை அறிவியல் ஒழுங்குடன் நடைமுறைப்படுத்தும் ஒரு நம்பகமான சித்தா & வர்மா மருத்துவ சேவை மையம்

- சித்த மருத்துவம்
- வர்ம சிகிச்சை
- மூட்டு, முதுகு, கழுத்துவலி சிகிச்சை
- நரம்பு சம்பந்தமான நோய்கள்
- நீண்டகால நோய்களுக்கு பக்கவிளைவில்லா இயற்கைமுறை சிகிச்சை
- பாரம்பரிய சித்த மருந்துகள் & வாழ்க்கைமுறை ஆலோசனை நோயின் மூலக்காரணத்தை அறிந்து உடலை முழுமையாக குணப்படுத்தும் பாரம்பரிய மருத்துவ அணுகுமுறை

"பாரம்பரியம் எங்கள் அடையாளம்
ஆரோக்கியமே எங்கள் இலக்கு"

தொடர்புக்கு : 93451 20316
G-mail : www.pandiyanadutrust@gmail.com

நீ தேடும் இறைவன் உனக்குள்ளேயே இருக்கிறான்: அய்யா வைகுண்டர்

நாகர்கோவில் குமரி சாலையில், சுசீந்திரத்தில் இருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது ஈத்தங்காடு என்னும் ஊர். இங்கிருந்து 3 கி.மீ. பயணித்தால் சாமித்தோப்பை அடையலாம். இயற்கை எழில் கொஞ்சும் தென்னந்தோப்புகள் நிறைந்தஇந்த அழகிய கிராமம், இந்தியா முழுக்கப்பரவியாபித் துள்ள சுவாமி அய்யா வைகுண்டரின் தருமபதி களுக்கு எல்லாம் தலைமைப்பதியாகத் திகழ்கிறது.

அய்யா வைகுண்டரின் தருமபதிக்குள்நுழைவ தற்கு முன்பாக, அய்யா உருவாக்கியமுத்திரிக் கிணற்றில் நீர் இறைத்து நீராடி, அந்தக்கிணற்றை வலம் வந்து வழிபட்ட பிறகே தருமபதிக்குள் அடி யெடுத்து வைக்க வேண்டும். எந்தவிதவேறுபாடும் இன்றி எல்லா மக்களும் பயன்படுத்துவதற்காக அய்யா வைகுண்டர் ஏற்படுத்திய பொதுக்கிணறு தான் இந்த முத்திரிக் கிணறு.

முத்திரி என்றால், 'உத்தரவாதம் தருதல்' அல்லது 'நியமித்தல்' என்று பொருள். அய்யா வைகுண்டரின் தருமபதி எங்கெல்லாம் இருக்கி றதோ, அங்கெல்லாம் முத்திரிக் கிணறு இருக்கும்.

முத்திரிக் கிணற்றில் புனித நீராடிவிட்டு, அய்யா வைகுண்டரின் தருமபதியை நோக்கிச்சில அடிகள் எடுத்து வைத்ததும், தகதகக்கும் பொன்வாசல் பளிச்சிடும். உள்ளே நுழைந்த உடன் அய்யா வை குண்டர் தவம் இருந்த வடக்குவாசலை "சிவசிவ சிவசிவா அரகர அரகரா" என்று உச்சரித்து 5 முறை சுற்றி அய்யாவிடம் மாப்பு கேட்டு, ஏழு நிலை ராஜகோபுரம் தாண்டி, தருமபதியின் கிழக்குப் பார்த்த முகப்பு வாசலை அடைய வேண்டும்.. முகப்பு வாசலில் இருந்தே அய்யா வைகுண்டரைத் தரிசிக்கலாம்.

கொடிமரத்தைக் கடந்து தியான மண்டபத்தை அடைந்ததும், அய்யா வைகுண்டரை மிக அருகில் தரிசிக்கலாம்.

பொதுவாக, கோயில்களில் தெய்வங்களை அழகுத் திருமேனிகளில் பார்த்துப் பழக்கப் பட்டிருப் போம். ஆனால், இங்கே அய்யா வைகுண்டரின் திருமேனி முற்றிலும் வித்தியாசமானது. ஒரு நாற்காலியில் அய்யா வைகுண்டர் இருப்பதாக பாவித்து, அவர் பயன் படுத்திய பொருட்களை



மாத்திரமே வைத்து வழிபடுகிறார்கள்.

நாற்காலிக்குப் பின்புறம் ஆளுயர நிலைக் கண்ணாடி இருக்கிறது. 'நீ தேடும் இறைவன் உனக்குள்ளேயே இருக்கிறான்' என்பது அய்யா வைகுண்டரின் வாக்கு. அதனாலேயே இப்படியரு வழிபாட்டு முறை! நிலைக் கண்ணாடி முன்பு தீபத்தை ஏற்றிவைத்து, இந்த வழிபாட்டு முறையை ஆரம்பித்து வைத்தவரும் அவரே! 'கண்ணாடி யினுள் தெரியும் நீயே கடவுள். உனக்குள் சுடர் விடும் ஒளியே கடவுள்' என்பதும் அய்யா வை குண்டரின் வாக்கு. உருவ வழிபாடு வேண்டாம் என்பது அய்யா வைகுண்டரின் விருப்பம் என்பதால், அதன்படியே சாமித்தோப்பு உள்ளிட்ட அய்யா வைகுண்டரின் எல்லாத் தருமபதிகளிலும் இந்த வழிபாட்டு முறையே பின்பற்றப்படுகிறது.

அய்யா வைகுண்டரின் பள்ளியறையை வலம் வரும் வழியில் அய்யா வைகுண்டர் மானிட அவதாரத்தில் பயன்படுத்திய கட்டில் வைக்கப் பட்டுள்ள அறையைக் காணலாம்.

பள்ளியறை தரிசனம் முடித்ததும், மறுபடியும் தியான மண்டபம் வழியாக வந்து, தருமபதியின் உள் பிராகாரத்தை வலம் வரலாம். அவ்வாறு வலம் வருகையில், கேரள கட்டடக்கலை முறையில் அமைந்துள்ள அய்யா வைகுண்டர் கருவறையின் பொன் விமானத்தைத் தரிசிக்கலாம்.

தருமபதி மட்டுமல்ல, இங்கே பின்பற்றப் படும் அத்தனை வழிபாட்டு முறைகளும் வித்தியாச மானவை.

தீப ஆராதனை கிடையாது. தேங்காய் உடைக்க மாட்டார்கள். தேங்காயை இங்கே உடைப்பது உயிர்ப் பலி கொடுப்பதற்குச் சமம் என்பதால், அப்படிச் செய்வதில்லை. கற்பூரம், சாம்பிராணி, ஊதுவத்தி ஆகியவற்றுக்கும் இங்கே இடமில்லை.

அப்படியென்றால், தருமபதிக்கு வரும்போது என்னதான் கொண்டு வரவேண்டும் என்கிறீர்களா?

வெற்றிலை பாக்கு, மல்லிகைப்பூ, துளசி, பிச்சிப்பூ, பன்னீர், முழு எலுமிச்சைப் பழம் ஆகியவற்றைக் கொண்டு வந்தால் போதும். இவை, அவற்றைக் கொண்டு வருவோருக்குத் திரும்பத் தரப்படமாட்டாது. மாறாக, இப்படி எல்லா பக்தர்களும் கொண்டு வரும் அனைத்துப் பொருள்களும் வழிபாட்டுக்குப் பிறகு, பிரசாதமாக அனைவருக்கும் சரிசமமாகத் தரப்படும்.

'காணிக்கை வேண்டா(து)ங்கோ' என்று அய்யா வைகுண்டரே சொல்லியிருப்பதால், தருமபதிகளில் உண்டியல்கள் கிடையாது. இங்கே பிரதானமாக வலியுறுத்தப்படுவதுஞ் 'உங்களால் முடிந்த தருமத்தைச் செய்யுங்கள்' என்பதுதான்.

'தருமம் செய்து தழைத்திருங்கோ' என்பது அய்யா வைகுண்டரின் வாக்கு என்பதால், இங்கே வரும் ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த தருமத்தைச் செய்கிறார்கள். அதாவது, தருமபதிகளில் நடைபெறும் அன்னதானத்துக்குத் தேவையான, தங்களால் முடிந்த நிதி உதவியை மனமுவந்து தரும் பக்தர்கள் இங்கு நிறையப் பேர்.

அய்யா வைகுண்டரைத் தேடி வந்து வழிபட்டால், நாம் நினைத்ததைச் சத்தியமாய் நிறைவேற்றித் தருவார் நம் அய்யா. அனைவரும் சாமித்தோப்பு சென்று அய்யா வைகுண்டரின் திருப்பாதம் பணிந்து வணங்கி, அவர் அருள்பெற்று வருவோம்!



5.11.2026



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன் / C.V.நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்: 9994323622 / 9994162182

துணை ஆசிரியர்கள்: ஷியாம்சுந்தர், ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய், வேல்.

வடிவமைப்பு: SML கிராபிக்ஸ் செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்களுக்கு
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

அருண்கேஸ் ஏஜன்ஸீஸ்









வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்

மக்கள் சேவையில் 27 ஆண்டுகள்

Bharatgas

பாரத பெட்ரோலியம்


இலவச இணைப்பு வழங்கப்படுகிறது, பதிவு செய்தவுடன் சிலிண்டர் வழங்கப்படுகிறது,
வீட்டிற்கே நேரடியாக வந்து உடனடி இணைப்பு வழங்கும் ஒரே நிறுவனம்

தொடர்ந்து எங்களுக்கு ஆதரவு அளித்துவரும் வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் நன்றி நன்றி

1/86 பூவந்திமெயின் ரோடு, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம் செல் 9443274648

கசவனபட்டி ஸ்ரீ ஜோதி மௌன நிர்வாண சுவாமிகள்

44வது ஆண்டு குருபூஜை விழா



திண்டுக்கல் கசவனபட்டி ஸ்ரீ ஜோதி மௌன நிர்வாண சுவாமிகள் 44வது ஆண்டு குருபூஜை விழா 12, மற்றும் 13ந்தேதிகளில் இரண்டு நாட்கள் நடைபெறுகிறது.

திண்டுக்கல் மாவட்டம்கன்னிவாடி அருகே உள்ள கசவனபட்டி கிராமத்தில் பல நூறு ஆண்டுகள் வாழ்ந்து தன்னை தேடிவரும் பக்தர்களுக்கு பல்வேறு அற்புதங்களை நிகழ்த்திக் காட்டியும் அருள் ஆசி வழங்கி அங்கேயே அவர் ஜீவசமாதி பீடம் உள்ளது. இங்கு தினமும் அன்னதானம் அமாவாசைபௌர்ணமி தினத்தில் சிறப்பு பூஜைகள் மற்றும்பிரதோஷம் நாட்களில்சிறப்புபூஜைகள்நடைபெற்றுவருகிறது. ஆண்டுதோறும் குருபூஜை விழா இரண்டு நாட்கள் நடைபெறும். இந்த ஆண்டு 44ம் ஆண்டு குருபூஜை விழா வரும் 12 வியாழன் 13 ந்தேதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறுகிறது. முதல்நாள் சிறப்பு யாகம் மற்றும் தீர்த்த அபிஷேகம் சிறப்பு பூஜைகள் மறுநாள் காலை கோபூஜை கணபதி ஹோமம் மற்றும் குருபூஜை வழிபாடு நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

இரண்டு நாட்கள் சிறப்பு அன்னதானமும் நடைபெறுகிறது. திண்டுக்கல் மற்றும் கன்னிவாடி ஆகிய ஊர்களில் இருந்து கசவனபட்டி ஜோதி மௌன நிர்வாண சுவாமிகள் அதிஷ்டானம் வரை பஸ் வசதி உள்ளது.

மேலும் விபரங்கள் தெரிய 9787618855 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.



வாழ்க்கை சிக்கலை போக்கும் சிக்கல் சிங்காரவேலர்

நாகப்பட்டினம் நகரில் உள்ள சிக்கல் என்ற ஊரில் உள்ளது சிங்காரவேலர் என்ற முருகன் கோயில்.

கோவிலின் மையத்தில் உயரமானபடிகள் கொண்ட ஒரு கட்டுமலை மேல் மூலவர் நவநீத நாதர் லிங்க வடிவில் அருள்புரியும் சந்நிதியும், சிக்கல் சிங்காரவேலர் என்று பிரசித்தி பெற்ற முருகப்பெருமான் சந்நிதியும் உள்ளன.

சிக்கல் சிங்காரவேலர், வள்ளி, தெய்வானையுடன் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். ஐப்பசி மாத விழாவில் வியர்வை சிந்தும் வேலவர் இவர்தான். கட்டுமலையின் கீழ்பக்கம் வேல் நெடுங்கண்ணி அம்மனின் சந்நிதி அமைந்துள்ளது. சக்தி, முருகனுக்கு வேல் தருவது போன்ற சிற்பம் சந்நிதியின் மேல்பாகத்தில் இருக்கிறது.

மல்லிகை தான் இங்கே தலவிருக்ஷம். ஒரு காலத்தில் மல்லிகை வனமாக இத்தலம் இருந்துள்ளது. ஆயிரம் வருடங்களுக்கும் மேல் பழமையான கோயிலிது. வசிஷ்டர் ஆசிரமம் இருந்த இடம் என்று தலவரலாறு சொல்கிறது.

ஈசனைத் தினமும் வழிபட்டு வந்தாராம் வசிஷ்டர். அப்போது காமதேனு ஒருசாபத்தின் காரணமாக பூமிக்கு வந்து இந்தத் தலத்திற்கு வந்து இங்கே இருந்த தீர்த்தத்தில் நீராடியதாம். நீராடும்போது காமதேனு பாலைச் சொரிய, அந்தப் பால் பெருகிக் குளமே பாற்குளமாக மாறியதாம். இதை க்ஷீரபுஷ்கரணி என அழைக்கின்றனர்.

பெருகி வந்த பாலில் இருந்து உருண்டு, திரண்டு வந்த வெண்ணெயை எடுத்து வசிஷ்டர் சிவலிங்கமாக்கி வழிபட்டாராம். வழிபாடு முடிந்ததும், வெண்ணெய் லிங்கத்தை எடுக்க முனைந்தார்.

அது அவரால் முடியாமல் வெண்ணெய் லிங்கம் அவர் கையிலேயே சிக்கிக் கொண்டது. சிக்கிக்கொண்ட இடமாதலால் சிக்கல் எனப் பெயர் பெற்றது என்பர். ஈசனின் திருமேனி வெண்ணெய்த் திருமேனி என்றும் நவநீதேஸ்வரர், திருவெண்ணெய்நாதர் என்ற பெயர்களில் அழைக்கப் படுகிறார்.

அன்னையின் பெயர் வேல்நெடுங்கண்ணி. சூரபத்மனை வதம் செய்வதற்காக வந்த சிங்காரவேலனுக்கு அன்னை வேல் கொடுத்து ஆசி வழங்கிய தலம் இது.

ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் சஷ்டித்திருவிழா நடைபெறும்போது முருகப்பெருமான் வேல்வாங்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

இவ்விழாவில் அன்னை உமாதேவியிடம் வேல் வாங்கிக் கொண்டு முருகப் பெருமான் தன் கோயிலுக்கு வந்துஅமர்ந்த பின்னால், வேலின் வல்லமையினால் சிங்காரவேலருக்கு_வியர்வை வெள்ளமாகப் பெருகும் காட்சி இன்றளவும் நடைபெறுகிறது. பட்டுத் துணியால் துடைக்கத் துடைக்க

முத்து முத்தாக வியர்வை முருகப் பெருமானுக்குப் பெருக்கெடுக்கிறது. "சிக்கலில் வேல் வாங்கி செந்தூரில் சம்ஹாரம்" என்ற வழக்குச் சொல்லும் இருக்கிறது.

பெருமாள் தனிச் சந்நிதி கொண்டு கோலவாமனப் பெருமாள் என்ற பெயரில் இங்கே காணப்படுகிறார்.

இம்மாதிரியாக ஈசனும், திருமாலும் ஒரே கூரையின் கீழ் குடிகொண்டு அருள் பாலிக்கும் கோயில்களில், *சிக்கல் மிக முக்கியமான ஒன்று.

பிரகார சுற்றி வரும்போது வடக்குச் சுற்றில் கோலவாமனப் பெருமாள் கோவில் தனியாக அமைந்திருக்கிறது.


ஸ்ரீதேவி, பூமாதேவி சகிதம் நின்ற திருக்கோலத்தில் பெருமாள் காட்சி தருகிறார். வடமேற்கு மூலையில் ஆஞ்சனேயர் சந்நிதி அமைந்திருக்கிறது.

வாமன அவதாரம் எடுத்தபோது பெருமாள் இந்தத் தலம் வந்து ஈசனை வழிபட்டதாகக் கூறப்படுகிறது. விஸ்வாமித்திரரும் இங்கு வழிபட்டு, இழந்தத் தவவலிமையைத் திரும்பப் பெற்றாராம். மேலும் முசுகுந்தச் சக்கரவர்த்தியின் பிரம்மஹத்தி தோஷமும், இங்கே தான் நீங்கியது என்கின்றனர்.

*அகத்தியரும் வந்து வழிபட்டாராம். இந்தத் தலத்தில் ஈசன் மட்டுமில்லாமல், முருகன், திருமால், அனுமன் என நால்வருமே பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். சத்ரு சம்ஹார திரிசதை அர்ச்சனை இங்கேதான் மிகவும் சிறப்பு வாய்ந்தது எனச் சொல்லப் படுகிறது.

அம்மனின் சக்தியே வேலாக மாறி முருகனுக்குக் கொடுக்கப் பட்டதால் இந்த அர்ச்சனையை இங்கே சஷ்டி விழா நடக்கும்போது மிகவும் சிறப்பாகப் பூஜைகளை நடத்தி வருகின்றனர்.

அன்னைக்கும் இங்கே முக்கியத்துவம் உண்டு. சக்தி பீடங்களில் இதுவும் மிக முக்கியமானதாகச் சொல்லப்படுகிறது. முருகப்பெருமானுக்கு வேல் வழங்கும் முன் அன்னை இங்கே தவமிருந்ததாகக் கூறுவர்.



வாடிக்கையாளர்கள்அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்



ரெத்னா பட்டாசுகடை

உரிமையாளர் B.ரெத்ன காளீஸ்வரன்
Cell:94436 1225
70106 18500 / 86680 08318

MULTI BANK ATM/CASH MECHINE

கொரியர் சர்வீஸ்

பட்டாசு மொத்த விற்பனையாளர்

DODLA பால்பொருள் மொத்த விற்பனையாளர்

dishtv SUN DIRECT ST COURIER The People's Choice
BIG TV VIDEOCON d2h
airtel digital TV TATA Sky DTDC Delivering Value

ஜெராக்ஸ், கலர் ஜெராக்ஸ், லேமினேஷன், செல்போன் சேல்ஸ் சர்வீஸ் மற்றும் அனைத்து வகையான ரீசார்ஜ் கார்டுகளும் கிடைக்கும்

9/378, காமராஜர் ரோடு, இளையான்குடி

பஞ்சபூத தலங்கள்



பஞ்சபூதங்கள் என்றும், பஞ்சபூத தலங்கள் என்றும் போற்றப்படுகிற ஐந்து திருத்தலங்களுக்கு ஒரே நாளில் சென்று தரிசனம் செய்தேன்.

ஒரே நாளில் சென்று தரிசனம் செய்ய முடியாது என்று சொல்கிறார் கள் ஆனால் ஒரே நாளில் 5 திருத் தலங்களுக்கும் சென்று வந்தேன்

'பஞ்சபூதங்கள் 1.நிலம் (பூமி), 2.நீர் (தண்ணீர்), 3.அக்னி (நெருப்பு), 4.வாயு (காற்று), 5.ஆகாயம் (வானம்) ஆகியன ஐந்தாகும்.

பஞ்சபூதங்களை உள்ளடக்கிய வழிபாட்டுத் தலங்கள் என்று போற் றப்படுகின்ற முக்கிய 5 திருக்கோவில் கள் ஆகும்.

பஞ்சபூத தலங்கள் என்று போற்றப் படுகின்ற 5 திருக்கோயில்கள் 4000 ஆண்டுகள், 3000 ஆண்டுகள் முன்பு கட்டப்பட்டதாகவும், இங்கு 1000 மண்டபங்கள் அமைந்துள்ளன. மிகப்பிரமாண்டமானதாகவும் ஏராள மான பொதுமக்கள் வழிபாட்டு தலங் களாகவும் திகழ்ந்து வருகின்றன.

பஞ்சபூத தலங்களில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும், நாயன்மார்களும் மற்றும் கண்ணப்ப நாயனார்,நக்கீர தேவ நாயனார் போன்ற பெரியோர்களும் பாடல் பெற்ற தலங்களாக போற்றப்படுகிறது.

1.நிலம் (பூமி) என்று போற்றி வணங்கப்படுகின்ற காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோவில் 3500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. மிகவும் பழமையானதும், பிரமாண்ட அளவில் கட்டப்பட்டுள்ளது. ஆதி சங்கரரால் தடம் பதித்த ஸ்தலம் ஆகும். இங்கு இரண்டாம் எலிசபெத் ராணி, முன்னாள் குடியரசுத் தலை வர்கள் முன்னாள் பிரதமர்கள்முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர்,ஜெய லலிதா போன்ற முக்கியமானவர்கள் வழிபாடு செய்த முக்கிய திருத்தலங் கள் ஆகும்.

2.நீர் திருச்சி, திருவானைக் காவலில் அமைந்துள்ள அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோவில் நீரில் அமைந்துள்ள சுயம்புலிங்கம். போற் றுதலுக்குரிய சமயப் பெரியோர்களால் பாடல் பெற்ற ஸ்தலம்.

3.அக்னி (நெருப்பு) திருவண்ணா மலையில் அமைந்துள்ள ஸ்ரீஅருணா சலீஸ்வரர் திருக்கோவில். இதுவும் சமயப் பெரியோர்களால் பாடல் பெற்ற ஸ்தலம், மூலிகைகள்நிறைந்துள்ள மூலிகை மரங்கள் நிறைந்துள்ள மலையை சுற்றி 14 கிலோமீட்டர் கிரிவலம். மாதம் தோறும் லட்சக் கணக்கானவர்கள் பங்கேற்கும் முக் கிய ஸ்தலமாகும்.

4.காற்று (வாயு) ஆந்திர மாநிலம் ஸ்ரீகாளஹஸ்தியில் அமைந்துள்ள ஸ்ரீ காளஹஸ்தீவரர் திருக்கோயில் ஆகும்.சமயப் பெரியோர்களால் பாடல் பெற்ற ஸ்தலம் ராகு, கேது பரிகார ஸ்தலம் என்று போற்றப்படுகிற திருக் கோயிலாகும்.

5. ஆகாயம் (வானம்) சிதம்பரத் தில் அமைந்துள்ள நடராஜர் திருக் கோயிலாகும் உலகப் புகழ் பெற்ற நடராஜர் கோவில் 21600 தங்க தகடு களால் மேற்கூரை மேயப் பட்டுள்ளது. இது 3500 ஆண்டுகள் பழமையான முக்கிய வரலாற்று ஸ்தலமாகும்.

பஞ்சபூத ஸ்தலங்கள் என்று போற்றப்படுகிற ஐந்து திருக்கோவில் களையும் ஒரே நாளில் சென்று வழிபட இயலாது என சொல்லப்படுகிறது. ஒரே நாளில் ஐந்து இடங்களையும் வழிபடுவது சிறப்புக்குரியது என்று சொல்கிறார்கள். ஒரே நாளில் ஐந்து இடங்களுக்கும் சென்று வழிபட்டு வந்தேன்.

சிவோபதேச ஞான சிவதீட்சை பெருவிழா



பலமுறை பிறந்து இறந்து துன்பமயமாகவே உழன்று வரும் ஆன்மாக்கள் மீண்டும் ஒரு கருவில் பிறக்காமல் முக்தி என்னும் மீண்டும் பிறவாமை பெற்று திருக்கயிலாயத்தில் நித்திய சிவானந்தம் பெற சிவாகம நெறிகளின் படியான சிவதீட்சைகள் பெறுவது ஒன்றே சிவாகமங்கள் வகுத்த நெறி புகழ்ச்சோழ நாயனார் திருமடம், தருமபுரி.

நடத்தும் சிவோபதேச ஞானசிவதீட்சை பெறுவிழா கருணையே வடிவாகிய கைலை மேவிய உமையொரு பாகனாரை என்றைக்கும் சுமக்கின்ற குரு மரபுக்கெல்லாம் முதல் குருநாதன் ஆகிய குரு கைலாய நந்தியம் பரம்பரை கூனம்பட்டி கல்யாணபுரி ஆதீனம் 57வது பட்டம் சைவ சாம்ராஜ்யத்தின் தீக்ஷா சக்கரவர்த்தி ஜகத்குரு ஞான குருமணிகள் *ஸ்ரீமத் ராஜ சரவண மாணிக்கவாசகர் குருசுவாமிகள் அவர்களின் அருள் ஆணையின் வண்ணம்

ஞானமே வடிவாகிய நமையாலும் திரிபுரசுந்தரி உடனாய பசுபதீஸ்வரர் பெருமான் திருவருளாலும் தருமபுரியில் புகழ்ச்சோழ நயனார் திருமடத்தில் வருகின்ற கார்த்திகை 28 ஆம் தேதி நான்காவது சோமவாரம் 14.12.2026 திங்கள்கிழமை தீட்சை விழாநடைபெற உள்ளது அது சமயம்

✶ சமயதீட்சை ✶ விசேடதீட்சை ✶ நிர்வாணதீட்சை மற்றும் ஆச் சார்யா அபிஷேகம் நடை பெற திரு உள்ளம்கொண்ட அடியார்கள் தங்கள் பெயர் பதிவு செய்து கொள்ளலாம்.

தொடர்புக்கு: 9597020844 என்றும் சிவப்பணியில் பக்திரத்னா சிவத்திரு ஈசானம் "சிவசெந்தில்குமார்" புகழ்ச்சோழ நாயனார் திருமடம் மற்றும் கூனம்பட்டி ஆதீனம் அடியார்கள் தருமபுரி.



இருளை நீக்கும் தீபாவளி அன்று கூறவேண்டிய மந்திரம்

தீபாவளியன்று அதிகாலையில் சூரியன் உதயம் ஆவதற்கு முன்பாகவே எழுந்து, உடல் முழுதும் நல்ல எண்ணெய் எனப்படும் எள்ளு எண்ணையை தேய்த்து சுடுநீரில் குளிப்பதை நாம் வழக்கமாக வைத்துள்ளோம்.

அப்படி நீராடுவதற்கு முன்பாக, நீங்கள் குளிக்க எடுத்து வைத் திருக்கும் நீரை சிறிதளவு கையில் எடுத்து,

"ஓம் நம சிவாயை
நாராயண்யை தச தோஷ
ஹராயை கங்காயை ஷ்வாஹா"

என்கிற மந்திரத்தை துதித்து விட்டு நீராடினால் நல்லது. இந்த மந்திரத்தை நாம் துதிப்பதன் மூலமாக கங்கை அம்மனை வணங்குகிறோம். அதாவது சிவ பெருமானின் சடையில் வசிப்பவன் கங்கை. அதனால் சிவனின் திருச்சடையில் இருப்பவளே, நாரணன் பாதத்தை நீராட்டி மகிழ்பவளே, எல்லா விதமான பாவங்களையும் போக்குபவளே உம்மை வணங்குகிறேன் என்பதே இம்மந்திரம்.


நாம் நீராடி முடித்ததும் புத்தாடை கள் அணிந்து, இறைவனை வணங்க விளக்கேற்றுவோம்.

அப்படி விளக்கு ஏற்றுவதற்கு முன்பாக விளக்காகவே இருக்கும் காமாட்சி அம்மனை வணங்குவது அவசியம்.



கோவில்களும் சிறப்பு அம்சங்களும்

- சிக்கல் சிங்காரவேலர் கோவிலில் சூரசம்ஹாரத்திற்காக முருகன் அம்பிகையிடம் வேல்வாங்கும்போது முருகனின்திருமேனி முழுவதும் வியர்வை பெருகுகிறது.
- திருநாகேஸ்வரம் சிவன் கோவிலில் ராகு காலத்தில் மட்டும் சிவபெருமானுக்கு செய்யப்படும் அபிஷேக பால் நீலநிறமாகிறது.
- நாகர்கோவில் கேரளபுரம் சிவன் கோவிலில் விநாயகர் ஆறுமாதகாலம் கருப்பாகவும்,ஆறு மாதம் வெண்மைநிறமாகவும் காட்சி தருகிறார்.
- வழிபாடு செய்யப்பட்ட சாணிப்பிள்ளையாரை கரையான்கள், வண்டுகள் அரிப்பதில்லை.
- திருபுறம்பியம் சுவேத விநாயகருக்கு அபிஷேகம் செய்யப்படும் தேன் முழுவதும் உறிஞ்சப்படுகிறது.
- ஆந்திராவில் மங்களகிரியில் பானகரம் தயாரித்து பானகநரசிம்மர் கோவிலில் நரசிம்மர் வாயில் ஒரு அண்டா அல்லது ஒரு தம்ளர் ஊற்றினால் பாதியை உள்வாங்கிக்கொள்கிறார். மீதி பாதியை பிரசாதமாக வழங்குகின்றனர்.
- கும்பாபிஷேகம்மற்றும் ஐயப் பனின் திருவா பரண பெட்டியை எடுத் துச் செல்லும் போது கருடன் தரிசனம் தருகிறது.
- கும்பகோணம் அருகே நாச்சியார் கோவிலில் கருட சேவையின்போது கல்கருடன் முதலில் 4 பேர் தூக்க ஆரம்பித்து பின் எடை படிப்படியாக அதிகரித்து வீதிக்கு வருவதற்குள் 8, 16, 32, 64 பேர் சேர்ந்து தூக்கும் அதிசயம் இன்றும்நடைபெறுகிறது.
- திருக்கழுக்குன்றத்தில் தெப்பக்குளத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு தோன்றுகிறது. சிவனுக்கு படைக்கப் பட்ட பிரசாதத்தை கழுகு உண்ணும் அதிசயம் நடைபெற்றது.



- திண்டுக்கல் அருகே திருமலைக்கேணி முருகன் கோவி லில் அருகருகே உள்ள தெய்வானை சுனையின் நீர் எப்போ தும் குளிர்ந்த நீராகவும், வள்ளிசுனையின் நீர் இரவுபகல் எந்நேரமும் வெந் நீராகவும் இருக்கிறது.
- தூத்துக்குடி முத்தையா புரம் மற்றும் மாளிகைப்பாறை கருப்பசாமி கோவிலில் கொடைவிழாவின்போது பூசாரி பாட்டில் பாட்டிலாக ஏராளமாக மதுவை அருந்தும் அற்புதம் நடக்கிறது.
- காசியில் கருடன் பறப்பதில்லை. மாடு முட்டுவதில்லை. பிணம் எரிந்தால்நாற்றம் எடுப்பதில்லை.பூக்கள் மணம் வீசுவதில்லை.
- சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகில் கல்லுமடை திருநாகேஸ்வரமுடையார் கோவிலில் மீனாட்சிஅம்மன் 2 மாதங்க ளுக்கு ஒருமுறை நிறம் மாறுகிறது.
- திருப்பத்தூர் – தர்மசாலா சாலையில் நான்கு வழி சாலையை அகலப்படுத்த நாகாத்தம்மன் குடிகொண்டிருக்கும் ஒரு பாம்புப் புற்றை அகற்ற முயன்றபோது 7 புல்டோசர்கள் பழுதாகி விட்டன. இறுதியில் அந்த பாம்புப்புற்றை இடிக்காமல் விட்டு விட்டு சாலை அமைத்தனர்.
- வேலூர் செங்கம் ரிஷிபேஸ்வரர் திருக் கோவிலில் ஆண்டுக்கு ஒருமுறை பங் குனியில் சூரிய ஒளிக்கதிர்கள் நந்தீஸ்வரர் மீது பட்டு தங்கநிறமாக ஜொலிக்கும் அதிசயம் நடைபெறுகிறது.



தீபாவளி தோன்றிய சுவாரஸ்ய வரலாறு



தீபாவளி என்றால் நினைவிற்கு வருவது புது புது ஆடை மற்றும் வெடி வெடிக்கும் பட்டாசும்தான். இந்த நாளை ஏன் தீபாவளியாக அனைவரும் கொண் டாடுகிறோம். அதற்கு ஒரு கதை உண்டு. 'தீபம்" என்றால் 'விளக்கு". 'ஆவளி" என்றால் 'வரிசை". அதாவது இந்த நாளில் விளக்குகளை வீட்டில் வரிசை வரிசையாய் அடுக்கி விளக்கேற்றி இருண்டு இருக்கும் வீட்டை பிரகாசமாக வைப்பது ஆகும்.

புராணக் கதை

இரண்யன் எனும் அசுரன், பூமிதேவியை கடத்தி கொண்டு பாதாளத்தில் மறைந்தான். பூமிதேவியை மீட்க, பன்றி வடிவெடுத்து, தன் பற்களால் பூமியை அகழ்ந்து சென்றார், மகாவிஷ்ணு. இரண்யனை வதம் செய்த பின், பூமியை, தன் தெற்றுப் பல் நுனியில் எடுத்துக்கொண்டு வெளியே வந்தார். பூமாதேவிக்கும், வராகருக்கும் ஏற்பட்ட இந்த ஸ்பரிசத்தில், பவுமன் பிறந்தான். பவுமன் என்றால், பூமியின் பிள்ளை என்று பொருள்.

பவுமன் திருமாலின் பிள்ளை என்ற தைரியத்தில், மக்களுக்கு பல்வேறு கொடுமைகளை செய்து வந்தான். அத்துடன், தேவலோகத்துக்கு சென்று, இந்திரனின் வெண்கொற்றக் குடையையும், அவனது தாய் அதிதி அணிந்திருந்த, அமுதம் சொட்டும் குண்டலங்களையும் பறித்து வந்தான்.

மனிதனாய் பிறந்திருந்தாலும், அசுர குணத்துடன் விளங்கியதால், இவனை, நரகாசுரன் என்றே மக்கள் அழைத்தனர். அவன் தேவர்களுக்கும், மக்களுக்கும் பல்வேறு துன்பங்களை கொடுத்து வந்தான்.

இதை அறிந்த மகாவிஷ்ணு அவனை கொல்ல நினைத்தார். ஆனால் அவன் பூமி தாய்க்கு பிறந்தவன். அவன் தன் தாயை தவிர வேறு யாராலும் கொல்லப்பட முடியாத வரம் பெற்றிருந்தான். எனவே மகாவிஷ்ணு ஒரு தந்திரம் செய்தார். மகாவிஷ்ணு கிருஷ்ணராகவும், பூமாதேவி சத்யபாமாவாகவும் பூமியில் அவதாரம் செய்தனர். பிறகு போர் நடந்தது.

அசுரன் மகாவிஷ்ணு மீது அம்பு எய்தினான். இந்த அம்பு பட்டு அவர் மயக்கம் அடைவது போல் கீழே விழுந்தார். இதை பார்த்த சத்யபாமா கோபம் அடைந்து நரகாசுரனை போருக்கு அழைத்தார். சத்யபாமா பூமியின் அவதாரம் என்று உணராமல் அவரோடு போர் செய்தான். அன்னையின் அம்புக்கு பலியாகி விழுந்தான்.

அப்போதுதான் அவனுக்கு சத்யபாமா தனது தாய் என்று தெரிந்தது. அப்போது அவரிடம், மனம் திருந்திய நரகாசுரன், தன் இறந்த நாளை மக்கள் ஆனந்த திருநாளாக கொண்டாட வரம் கேட்டான். இதையொட்டி நரகாசுரன் மறைந்து மகிழ்ச்சி பொங்கிய நாள் தீபாவளி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.